**செய்தி வெளியீடு எண்:677** **நாள்: 11.10.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.10.2017) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் தூத்துக்குடி, ராஜீவ் காந்தி நகர் திட்டப் பகுதியில் 29 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 444 அடுக்குமாடிக் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 574 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் ஆகிய துறைகளின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மக்கள் தொகை பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், குறிப்பாக ஏழை, எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் தூத்துக்குடி, ராஜீவ் காந்தி நகர் திட்டப் பகுதியில் 5.12 ஏக்கர் நிலப் பரப்பளவில் 29 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 444 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். இப்புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 341 சதுர அடி கட்டட பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டப்பகுதியில், மழைநீர் வடிகால் வசதி, கழிவுநீரகற்று வசதி, தண்ணீர் சேகரிக்கும் தொட்டி, பூங்கா, அங்கன்வாடி வசதி, மழைநீர் சேகரிக்கும் வசதி, சாலை வசதி, தெரு மின்விளக்குகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் வேலூர், குளவிமேடு திட்டப்பகுதியில் 1.87 ஏக்கர் நிலப் பரப்பளவில் 15 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூரில் **14.41** ஏக்கர் நிலப் பரப்பளவில் **496** கோடியே **69** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **1,500** பன்னடுக்குமாடி குடியிருப்புகள்; திருவள்ளூர் மாவட்டம் – நொளம்பூரில் **0.37** ஏக்கர் நிலப் பரப்பளவில் **7** கோடியே **33** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் வருவாய் பிரிவினருக்கான **24** அடுக்குமாடி குடியிருப்புகள்; திருவள்ளூர் மாவட்டம் – அம்பத்தூரில் **1.38** ஏக்கர் நிலப் பரப்பளவில் **29** கோடியே **63** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் வருவாய் பிரிவினருக்கான **92** அடுக்குமாடி குடியிருப்புகள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – மதுராந்தகம், கடப்பேரி கிராமத்தில் **0.50** ஏக்கர் நிலப் பரப்பளவில் **1** கோடியே **44** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குறைந்த வருவாய் பிரிவினருக்கான **14** வீடுகள்; வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பகுதி–**5** திட்டப்பகுதியில் **0.90** ஏக்கர் நிலப் பரப்பளவில் **16** கோடியே **38** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் வருவாய் பிரிவினருக்கான **64** அடுக்குமாடி குடியிருப்புகள்; மதுரை மாவட்டம், ஆணையூர் மதுரை வடக்கு புறநகர் திட்டப்பகுதி–**1** மற்றும் **2**–இல் **0.27** ஏக்கர் நிலப் பரப்பளவில் **5** கோடியே **62** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் வருவாய் பிரிவினருக்கான **32** அடுக்குமாடி குடியிருப்புகள்;

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக முழுமைத் திட்ட வளாகத்தில் **449.82** சதுர மீட்டர் நிலப் பரப்பளவில், **1** கோடியே **4** லட்சத்து **50** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் **603** கோடியே **18** லட்சத்து **50** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் கணினி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்ட www.ppacmda.tn.gov.in என்ற இணையதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இதன் மூலம், திட்ட அனுமதி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அதற்கு தேவையான ஆவணங்கள்

மற்றும் திட்ட வரைபடங்கள் போன்றவற்றை இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தவுடன் அதற்குரிய ஒப்புகையை தங்களுக்கான உள்நுழைவில் (Login) பெற முடியும். மேலும், இணையம் மூலம் பல்வேறு கட்டடங்களின் விண்ணப்பத்தின் நிலையையும் அறிந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் (Tamil Nadu Real Estate Regulatory Authority) www.tnrera.in என்ற இணையதளத்தில் நேரடியாக விண்ணப்பிக்கும் வசதியினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், கட்டிட மனை மேம்பாட்டாளர்கள் தங்கள் திட்டப் பணிகளையும், முகவர்கள் தங்கள் பதிவுகளையும் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கலாம். மேலும், பதிவு செய்யப்பட்ட கட்டுமான திட்டங்களை பற்றிய தற்போதைய நிலையினை பொதுமக்கள் அறிந்து கொள்ள இந்த இணையத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கட்டுமான திட்டப்பணிகளின் குறைபாட்டினை குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்க இந்த இணையதளம் உதவிகரமாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு. பி.கே. வைரமுத்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.சி. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 11.10.2017**